**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**29 |
| Name | : | **விஜயா** |
| Husband Name | : | **செல்வம்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 40/2025 |

**தேதி : 03.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் செட்டிக்குளத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரி வசந்தியை தெரியும். எனக்கு ஏற்கெனவே 3 லோன் வாங்கி கொடுத்த வகையில் எதிரி வசந்தியை எனக்கு தெரியும். எதிரி என்னிடம் அவருடைய வீடு கட்டுவதற்காக பணம் தேவைப்படுவதாக என்னிடம் பணம் கேட்டார். லோன்வாங்கி கொடுத்தால் அதற்கான தவணை தொகைகளை அவரே கட்டிவிடுவதாக சொன்னார். அதனால் நான் பெரம்பலூரில் உள்ள கிராம சக்தி என்ற தனியார் நிறுவனத்தில் கடன் ரூ.50,000/-ஐ பெற்று நான் ரூ.25,000/- எடுத்துக்கொண்டு மீதி ரூ. 25,000/-ஐ வசந்தியிடம் ரொக்கமாக பணம் கொடுத்தேன். அவர் அந்த கடன் தொகையின் தவணைகளை கட்டிவிடுவதாக சொன்னதை நம்பி கடன் வாங்கிகொடுத்தேன். ஆனால் அவர் அதில் மூன்று தவணைகள் மட்டும் செலுத்தினார். மீதி தவணை செலுத்தவில்லை. அதனால் நிதி நிறுவனத்திலிருந்து வசூல் செய்பவர்கள் என்னிடம் வந்து பணம் கட்ட சொன்னார்கள். நான் வசந்தியிடம் பணம்

கொடுத்துவிட்டேன் என்றும் அவர் கட்டிவிடுவார் என்றும் சொன்னேன். ஆனால் அவர்கள் வசந்தி பணம் கட்டவில்லை என்று அவர் தலைமறைவாகிவிட்டார் என்று சொன்னார்கள். துவாரா நிதி நிறுவனத்திலிருந்து வாங்கிய கடனில் எனக்கு எதிரி ரூபாய் இரண்டாயிரம் தரவேண்டும். ஊரில் விசாரித்தபோது எதிரி வசந்தி நிறைய பேரிடம் கடன் வாங்கிகொண்டு பணம் கட்டாமல் தலைமறைவாகிவிட்டதாக சொன்னார்கள். சத்தியா என்பவர் பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலை் புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள். வசந்திக்கு வாங்கிகொடுத்த கடனுக்கான தவணை தொகைகளை தற்போது நான்தான் கட்டி வருகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரத்தைதான் போலீஸார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். போலீஸார் என்னை விசாரித்தபோது கிராம சக்தி நிறுவனத்தில்தான் பணம் வாங்கி கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன். எந்த தேதியில் கடன் வாங்கிகொடுத்தேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனக்கு இந்த லோன் வாங்கு முன்பு லோன் வாங்கி கொடுத்துள்ளார். கொடுத்த கடனில் எதிரி மூன்று தவணைகள் செலுத்தியுள்ளார். எதிரி எனக்கு பக்கத்து வீடு, பழக்கம் என்றால் சரிதான். எதிரி எனக்கு ஏற்கெனவே கடன் வாங்கி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எதிரிக்கு ஏமாற்றவேண்டுமென்ற எண்ணம் இல்லை. எல்லோரும் சேர்ந்து அவரை முற்றுகையிட்டதால் அவரால் தவணைகளை சரிவர செலுத்தமுடியவில்லை என்றால் சரியல்ல. வசந்தி என்னிடம் வாங்கிய பணத்தை கட்ட முடியாது என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

**எனக்கு சேர வேண்டிய பணத்தை எதிரி தந்துவிடுவார் என்றால் கொடுத்தால் வாங்கிகொள்ளுகிறேன்.**

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.